52

6 NOV 1930

ஞானானந்த சுவானுபூதி

இஃது

திண்டுக்கல்

தேசியஞான ஆசிரியர்

கி. மருதநாயகம் பிள்ளை

அவர்களால் இயற்றப் பெற்று

புதுக்கோட்டை காலேஜ்

பென்ஷன், டீச்சர்,

என். அருணாசலய்யர், அவர்களால்

பிரஸில் அச்சியற்றப் பெற்றது.

மதுரை.

1930.

விலை அணா 2.

176672

இன்னூல்.

நிரதிசயானந்தத்தை விரும்பிப் பல வகையாலும் ஆத்மஞானதத்துவ சாஸ்திரங்களைத் தீர விசாரித்தறிந்த முமுக்ஷுக்களுக்கு அப்பியாசம் செய்யுமிடத்து உதவி செய்வதாகவும் சமாதி ஞானத்திற்குப் பிறகுண்டாக வேண்டிய சகச ரனுபவத்தை விளக்குவதாகவும் உபயோகப்படுமென நம்பி வெளியிடுகிறேன்.

N. Arunachalla Iyer.

(ஓம் பரப்பரம்மணே நம:)

1. சத்திசிவம் கூடித் தனித்த விடத்துதித்த
அத்தி முகனென்னு மானந்த—சித்தி
விநாயகனைப் போற்றுவா மெஞ்ஞான மோத
கனை சுழுத்தி சொர்ப்பனத்தும் நாம்.

2. பவாதீத ஞானப் பரப்பினையாங் கண்ட
சுவானு பவமாகச் சொல்வாம்—அவாவி
அருணகிரி யென்னு மருட்குருவாம் ஞான
சொருபத் தள்ளிற் சுகித்து

3. எனையலது வேறிலையென் றறிந்தபின்ன
ரெனையிழிவா யெவரிடத்தி லுரைக்கவேண்டும்
எனையலது வேறிலையென் றறிந்தபின்ன
ரெனையிழிவா யுறைப்பவரிங் கிலவேயில்லை
எனையலது வேறிலையென் றறியாமுன்ன
ரெனையிழிவா யுரைப்பரென விரங்கேனிப்பா
லெனையலது வேறிலையென் றறியவேண்டி
யிரங்குவோர்க் கமுதமென வியம்புவேனே.

1. உலகி னில்லை யுணர வுணர
உலகம் வெறுப்பே யாகி விடுமிவ்
வுலகி னியல்லை யுணர வுணர
உடலும் வெறுப்பே யாகி விடுமிவ்

வுலகி னியல்பை யுணர வுணர
உளமும் வெறுப்பே யாகிவிடுமேல்
வுலகி னியல்பை யுணர வுணர
வுணர்வே விருப்ப மாகி விடுமே.

2. உணர்வை யுணர வுணர வித்த
உலக மருவா யுருகி விடுமேல்
வுணர்வை யுணர வுணர வித்த
உடலு மருவா யுருகி விடுமேல்
வுணர்வை யுணர வுணர வித்த
உளமு மருவா யுருகி விடுமேல்
வுணர்வை யுணர வுணர வித்த
உணர்வே யகில மாகி விடுமே.

3. உணர்வை யுணர வுணர வித்த
உணர்வே யுலக மாகி விடுமேல்
வுணர்வை யுணர வுணர வித்த
உணர்வே ஜீவ னாகி விடுமேல்
வுணர்வை யுணர வுணர வித்த
உணர்வே ஈச னாகி விடுமேல்
வுணர்வை யுணர வுணர வித்த
உணர்வே பிரம்ம மாகி விடுமே.

4. உலகி னியல்பை யுணர வல்லோன்
   னுலகில் முமுக்ஷு வென்னப் படுவோன்
உலகி னியல்பை யுணர வல்லோ
   னுலகில் யோகி யென்னப் படுவோன்
உலகி னியல்பை யுணர வல்லோ
   னுலகில் ஞானி யென்னப் படுவோன்
உலகி னியல்பை யுணர வல்லோ
   னுலகில் பரம பதமே யடைவன்.

5. உலகி னியல்பை யுணரும் வகையை
   யுரைப்ப னுங்கட் கறிமி னிந்த
உலகி னியல்பை யுணர வெண்ணி
   லோயா திரவு பகலு மாகச்
சிலது காலம் நினைவ தெல்லாம்
   தீர நோக்கி யாவ தென்னென்
றிலகு முணர்வி லுணரி லாவ
   தில்லா தெல்லா மாகி விடுமே.

6. சொல்லக் கேண்மி னுங்கட் கிந்த
   சூட்ச முடனே யிடைவி டாமல்
அல்லும் பகலு முணர வெண்ணி
   லாகா தாத லாலே வன்மை

இல்ல மென்றயர்ந்து நீரும்
இடைய வேண்டா மெறும்பு மூரக்
கல்லுங் கரையு மென்ப துள்ளம்
கருதி யெண்ணும் போதி லுணர்விர்.

7. மறந்து மறந்து நினைவ தாலும்
மதியு ளோரே கெடுத லில்லை
சிறந்த நாளி யறுப தினையும்
சிலது நாளிற் சுகம தாக
மறந்தி டாது நினைக்கு மாறு
வழக்கம் நாமே செய்ய லாகும்
கறந்த முலைநற்க் காம்பின் பாலும்
கலைய நிறையு மாறு போல.

8. உலகி னியல்பு வெறுப்ப தாக
உங்கட்க் கிருந்த போது மிந்த
உலகை விடலு மாகா தென்ப
துறுதி யாக வுணரு வீரிவ்
வுலகை விடுதல் கெடுதி யாகும்
உணவு தேட லறுதி யாகும்
உலகை வெறுத்த உணர்வை யாசா
னுரையிற்க் கண்டு தேறு வீரே.

9. உணர்வைக் காணக் குருவைத் தேடி
உழலில் மனது சபல மாகும்
உணர்வி னலிவ் வுலகை வெறுத்திவ்
வுலகை வெறுத்த வுணர்வை நாடி
லுணர்வு குருவா யுமது மயலை
யொழிக்கு மெனவே யுறுதி கொள்வீர்
உணர்வை யறியும் வழியை யின்னு
முரைப்பன் றெளிவா யறிகு வீரே.

10. உணர்வு சச்சி தானந் தம்மென்
றுண்மை நீர்கண் டுணரு வீரிங்
குணர்வு ஜென்ம ஜென்மந் தோறு
முறுவ தாலே சத்து மாகும்
உணர்வு ஜென்ம ஜென்மந் தோறு
முணர்வ தாலே சித்து மாகும்
உணர்வு ஜென்ம ஜென்மந் தோரு
மொழியா மகிழ்வா லானந் தம்மே.

11. உணரில்த் துன்ப மெனவ திந்திவ்
வுலகை வெறுத்த பிரிய மேதிங்
குணரில்த் துன்ப மெனவ திந்திவ்
வுடலை வெறுத்த பிரிய மேதிங்

குணரில்த் துன்ப மெனவ றிந்திவ்
    வுளத்தை வெறுத்த பிரியமேதிங்
குணரில்த் துன்ப மெனவ றிந்திவ்
    வுணர்வி லுணர்வா யிருந்த துணர்விர்.

12. உடலி லுணர்வு பிரிந்து துன்ப்
    மொழியு மாறிங் குறைக்க வறிவிர்
உடலி னுணர்வு பிரிந்த போதிங்
    குணவில்த் தேவை உணர்வுக் கில்லை
உடலி னுணவு தேவை யற்ற
    உணர்வு வுணவுக் கலைவ தில்லை
உடலி னுணவுக் குடலே தேடி
    உழலும் வகையின் னறிகு வீரெ.

13. உணர்வு கெட்ட வுடலுக் கிங்கண்
    உணவி லுணர்வு வருவ துரைப்பன்
உணர்வு கெட்ட பொழுதே யிந்த
    வுடலும் வீழா துரைவ தாலே
உணரில் விதித்த வுணவு பின்னு
    முடலுக் குளதென் றறிவி ருடலை
உணர்வு பிரிந்தும் விதியி னுணவி
    னுடலு முணர்வி னுதவி பெறுமெ.

14. செயல தற்ற வுடலு மெந்தச்
    செயலி னாலே உணர்வை நத்தும்
இயல்பென் றுள்ள மயங்க வேண்டா
    மீச னியதி யுணவி னாலோர்
செயலு மற்ற காந்த மலையின்
    செயலை யயமே னத்தல் போலச்
செயல தற்ற வுணர்வை நத்தும்
    செயலு முடம்பு பெறுவ தறிவிர்.

15. உலகி லுடலி னுணவு முளதே
    லுலகு முடலுக் குணவு தருமிவ்
உலகி லுடலி னுணவு முளதே
    லுடலு முலகி னுணவு புசியும்
முலையி னமுது குழவி யுணவு
    முடியு மளவு பெறுகு மந்த
முலையி னமுது குழவி யுணவு
    முடியு மளவே யுணலு மாகும்.

16. உணர்வு முணவை வெறுத்த பொழுதி
    லோய்ந்த பம்ய ரம்போ லிங்கு
னுணர்வு பஞ்ச வுணர்வி னாலும்
    முலகை யுணர்வ தில்லை பின்னு

முணர்வு தன்னில் தானு மொன்றை
யுணர்வ தற்று நின்ற நாளிங்
வுணர்வு தானே நிற்ப தென்னு
முணர்வு மின்றி நிற்கு மாதொ.

17. உணர்வி லுணர்வு சுகிக்கு மளவி
லுடலை யணவிர்க் கொளுத்தி னலும்
உணர்வு வெளியில் வருவ தில்லை
யுரைப்ப னுங்கட்க் கறிமி னித்த
உணர்வு வெளியில் வருகு மென்னி
லுணர்வி லுணர்வு கரைத லின்றி
யுணவை யருந்த விருந்த தெனவே
யுளத்தி லுறுதி கொள்ளு வீரெ.

18. தன்னிலே தான்சுகமா யிருக்கும்ஞானி
ஜகத்திலே மனமுளன்று திறிவதில்லை
பின்னுமுனு மென்றைப் போதினிலெம்
பிராணளித்த போகமதைப் பேதமின்றி
முன்னிலையில்க் கண்டதனை புசித்துமீதி
மோகமின்றி யவ்விடத்தே போட்டகன்றிங்
கென்னினைவு மின்றியோ ரிடமு மின்றி
யெங்கெவ்வா றவ்விதமே யிருப்பான்றே.

19. இன்னும்வெளி யாகநன்று யுரைப்பனித்த
வியல்புடனே யுங்களுக்கு வந்திடாது
என்னுரையை நம்பிநீ ருலகினியல்
பேதெனவே யாய்ந்துலகில் வெறுப்புவந்தால்
பின்னுணர்வை நாடியவ் வுணர்விலெந்த
பேதமுமே தோன்றுமற் சிறிதுகாலம்
நன்முயர்ச்சி செய்துவந்தா லுணர்வுதானே
சற்குருவாய்த் தோன்றிவழி காட்டுமென்றே.

20. சற்குருவென் றுனுறுவாய்த் தோன்றிவந்து
ஞாலமதி லுனக்குமொழி சொல்வதில்லை
சிற்ககன மானவுன்னி லுனக்குவந்த
சிந்தைமய வற்பமுமே சேர்ந்திடாமல்
தற்க்கறிவி லேவிளங்கு மதுகாலங்கே
தடையற்ற வானந்த கனமதாக
நிற்குநிலை தனையறிந்தவ் விடத்தைநாடி
நீங்காதங் குறைக்கவுளம் பழகுவாயே.

21. பழகவென்றால் மிகமுயன்று வருந்திடாமல்
பாருலகை வெறுத்தவுணர் வதனைநாடி
மழலைகர் மனதையா னந்தமாக
வசப்படுத்தி னுல்சுகமாய் வசமதாகும்

சுழுமன மறிஞருக்கே வசமாம்ஞான
சூனியரை மிகவலைத்துத் துன்பஞ்செய்யும்
பழவினையால் வருமிதென மயங்கிடாதே
பதறாவாய் நூன்முயர்ச்சி பண்ணுவாயே.

22. வினைவருமா றுரைப்பனிது கேண்மினாகா
மியம்பிரா ரத்வசஞ் சிதமூன்றாகும்
நினைவெந்தப் பொருள்விரும்பி னாலுமந்த
நினைவழுந்து நிச்சயமா காமியங்காண்
நினைவெந்தப் பொருளையடைந் தனுபவிக்க
நேர்ந்துதந்தப் பொருள்பிரா ரத்துவமாகும்
வினையுணுமித் தேகானு பவதிடமாய்
மிஞ்சும்வினை சஞ்சிதமாய் விளம்பலாமே.

23. நல்வினைதீ வினையிரண்டு மிவ்வாறாகும்
ஞானமதை நீயழுந்த விரும்பினாலே
தொல்லுலகில் விடுதியா காமியந்தான்
தொடர்ந்ததென வுறுதிமொழி சொல்லுகின்றேன்
நெல்முளையை பக்ஷிபொருக் கிடாதவண்ணம்
நீர்பெறுக்கிக் கார்ப்பதுபோல் நினதுநெஞ்சில்
தொல்பகையாங் காமாதி ஞானவித்தை
துடைத்திடா துரைக்கநூல் பழகுவாயே.

24. ஞானமதி விச்சைமுதற் பூமியாச்சு
நன்குவிசா ரித்துணர்தல்ரண்டதாகும்
மானமுதல் கெட்டுமனஞ் சிறுகல்மூன்று
மதித்துண்மை தனில்நிலைத்தல் நான்கதாகும்
ஊனமிலா வுண்முகமே அஞ்சதாகும்
உண்முகமும் கெட்டவிட மாறதாகும்
ஈனமிலா விதேகமுக்தி ஏழதாகும்
இதன்விபா மின்னமுமக் குரைக்கின்றேனே.

25. மூன்றுபுவிக யளவுலவை நம்பலாலே
முமுக்ஷுவாய்ச் சாக்கிரமாய் மொழிவர்மேலோர்
நான்கதனில் நினைவெனவே காண்பதாலே
ஞானியெனக் கனவெனவே நவிலுவார்கள்
காண்பதற்ற தாலஞ்சு சுழுத்தியாச்சு
கருத்துமற்ற தாலாறு துரியமாகும்
என்றவுட விறல்துரியா தீதமாகும்
இன்னென்கும் பிறப்பையறுத் திருப்பதாமே.

26. முன்மூன்று பூமிபிறப் பொழியாதாலே
மோசமிலை யும்பருல கத்துளாவி
பின்னும்நல்லோர் குலத்துதித்து ஞானியாகிப்
பிறப்பறுத்துப் பாமபதம் பெறுவதாகும்

இன்னுமுமக் குறைப்பன்முதற் பூமிவர்தா
லெவ்விதமும் முக்திநிலை யெய்தலாகும்
கன்மமெனுங் குழிவிழுந்தாங் காரங்கொண்டால்
கடைகெட்டுப் பிறந்துழல்வர் கசடர்தாமே.

27. நலமென்றெக் கன்மம்நீ செய்ததாலும்
ஞானமிலை யுணர்வையுணர் வாலுணர்ந்தில்
வுலகுடலும் பொய்யெனவிங் குணர்ந்தபோதே
யுற்றபந்த சஞ்சிதம்வெண் ணீராய்ப்போகும்
பலதீமை செய்தாலும் ஞானமென்னும்
பதவிக்கோர் கெடுதலில்லை பகுத்துச்சொல்வேன்
இலதிந்த ஞானம்பொய் யென்றுநீங்கில்
இயல்விடுதி சஞ்சிதம்வெண் ணீராய்ப்போகும்.

28. உணர்விலுணர் வானந்த முறும்போதிந்த
உடல்செய்த தீமையுல கத்தோரேசார்
உணர்வுடலை நத்தியுல கத்தையோர்ந்தா
லொருதீமை யுலகத்தில் செய்யொணாது
உணர்விலுணர் வானந்த முறுதபோதில்
வுலகத்தி லுறுதொழிலை யொருக்கவேண்டாம்
உணர்விலுணர் வானந்த மடையுமட்டும்
உணர்விலுணர் வதனையே வுணருவாயே.

29. ஞானபுவி யேழுரைத்து நாலடைந்தோர்
ஞாலமதில் ஜனிப்பதில்லை யென்றசொன்னால்
ஆனவைந்தா ரேழுபுவி மட்டுமிங்கே
அனுபவியாக் குறைவருமென் றஞ்சவேண்டாம்
எனெனிலிவ் வுலகில்லை ஜென்மமில்லை
யீதுளதென் போர்ஜெனித்திங் குளலுவார்கள்
ஆனதால் நீஉண்மை யறிந்துகொண்டால்
அறியாமை யாஞ்ஜென்ம மகன்றபோமே.

30. ஜெனனமர ணத்தன்மை யுமக்குநான்றாய்ச்
செப்புகிறே னறியாமை யானஜீவர்
மனனமே செய்துலகி லனந்தகன்ம
வாதனையார்ந் ததிலூன்றி வாழ்வதாலே
நினைவிழந்திங் குறங்கையிலும் நினைவேதோன்றி
நீள்கனவாய் பலகன்மஞ் செய்தல்போல
மனமூர்ச்சை யெனுமரண முற்றபின்னு
மனனமே செய்தல்மறு ஜனனமாமே.

31. சஞ்சிதத்தால் ஜென்மமுற்று காமியத்தின்
தன்வலியா லேழ்தோற்றத் தோர்பிறப்பாய்
செஞ்சுணர்ந்தாங் கதற்கேற்ற வியல்பதாக
நீள்புவியிற் கன்மத்தே நிற்குமுள்ளம்

எஞ்சுதலற் றெனவுரைத்தால் நினைவுதானே
இயல்கறுவா யுறுவாகி யெழுந்தவாரை
யுஞ்சொலினு லுரைக்கவெனில தன்விபரம்.
உமக்குரைப்பேன் மனங்கனித்திங் குணறுவீரே.

32. கறுவுற்ற தில்லையிங்க னுணர்ந்துநோக்கின்

கற்பனையாய் பலவடிவைக் காண்பதாலே
உருவுற்றோங் கருவாகி யெனமயங்கி
யுணறுகிறீர் மயக்கத்தா ருரையினாலும்
இருநிலத்தில் தனைகருவி லறிந்தாரில்லை
இறந்துமறு ஜெனனவய தின்றாள்மட்டும்
கருதும்நினை வில்லையென்றால் நாளளவும்
கருத்தற்ற விடத்தில்லை கண்டுபாரே.

33. காலவள வதனையிங்கே வுரைக்கவென்னில்
கர்ப்பனையாய் காண்பதலால் வேறொன்றில்லை
ஜாலமிது மனத்தினது செயலேயாகும்
ஜனங்கர்ப்பம கர்ப்பமொரு கணமாய்ச்செய்யும்
ஞாலமதில் முன்னுடலை யிழந்திறந்தோர்
நாளிகையில் இவ்வயதாய்க் காணலாகும்
மாலுறவிங் கிவ்வுடலுக் கிவ்வயதை
மனதுலகை நோக்கியதால் மதிக்கலாகும்.

34. மயக்கவுரை ஈ்புதல்மாத் திரமளவாம்
மகானுரையை யனுபவத்திற் காண்பதாகும்
தியக்கமற்றிங் கனுபவிக்க ஞானமுற்றோர்
ஜென்மாகி தத்தினையுஞ் செப்புகின்றேன்
லயப்படுத்தி மனதலைவைக் கொன்றிடில்ஞா
லத்தவர்க்கே பற்றின்றிக் கன்மமின்றிச்
சுயப்பொருளாய்ப் பூரணமா யகண்டமாகித்
தொல்லுணர்வா மவர்நிலையைச் சொல்லொணாதே.

(68:417 NBS

35. அன்னிலையி லவறிருக்க வுடல்காலத்
தளவினால் நாசமடைந் திட்டபோதும்
தன்னுடல மிருந்ததென்றும் விட்டதென்றும்
ஜன்மமிலா முத்திபெற்றிங் கிருப்பதென்றும்
என்னினைவு மில்லாதால் பின்ஜனன
மெடுப்பதிலை யென்பதனை யிந்த[illegible]
தன்னுளத்தை யுணர்விலே கலை[illegible]நின்றால
ஜன்மமிலை சத்தியமென் றறிகுவீரே.

600 009
176672

36. அத்துவித வுண்மைமகா ரகசியத்தை
யறைகிறே னறிவிரிதை யறிந்தபோதே
மெத்துகின்ற வாதனைபோம் ஜென்மம்போம்.
மெஞ்ஞான வபரோக்ஷம் விளங்கலாகும்

இத்துவித பாவனையும் விட்டுநீங்கும்
இவ்விடத்தி லிப்போதே யின்பமாகும்
நித்தபரி பூரணமாம் பிரம்மமொன்றே
நின்றதய லில்லையென்றே நிச்சயிப்பீர்.

37. உலகமிங்கே ஜடவடிவாய்த் தோற்றுதல்லா
லுயர்பிரமப் பொருளையெங்குக் தேடிக்காணோம்
இலகுபரப் பிரமம்முல கிற்பினமோ
இலதபின மோபின்னா பின்னமோ
நலமுறைப்பி ரெனிலுலகம் வஸ்துவபி
னத்தெறிவி ரெனில்மண்ணிற் குடமெனவோ
சொலுமெனிலங் கொருகுயவன் தோன்றவில்லை
தொல்வடிவில்த் திரிதவில்லை யறிகுவீரே.

38. கெடுதலுற்ற பாலென்னிற் கெடவுமில்லை
கெட்டபால் நயமாகப் போவதில்லை
த்டையற்ற வானந்த கனமதாக
தானேதா னிருந்ததெனச் சாற்றலாகும்
சுடரினொளி போலென்னி லொளியுமந்தச்
சுடருக்கப் பாலெங்கும் வீசிநிற்கும்
இடமற்றுத் தானேதா னாகின்ற
இயல்பிரமத் தப்பாலெங் கிடமுண்டாகும்.

39. பினைபெத்த விதமாயிவ் வுலகமாகப்
பிறங்குதந்த பிரம்மமெனப் பேசவெண்ணில்
அனிர்வசன்ய மெனப்பெரியோ ரரைவரென்றால்
லறிவதற்கிங் குளத்தெட்ட வில்லையென்றீர்
நினைவிழந்திங் குறங்கையிலே கனவுதோன்றி
நிள்புவியாய்ப் பலவடிவாய்த் தோற்றுதந்த
கனவுலகம் முமையலது வேறிலையக்
காரணத்தை முன்முறையிற் கவனிப்பீரே.

40. கனவைநிக ரெனிலந்தப் பிரமமங்கே
கண்ணுறக்கங் கொண்டதெனக் கருதவேண்டாம்
நினைவதனி லுலகமுண்டாய் விரிந்தவாறு
நிச்சயமாய்ச் சொல்லுகிறே னறிந்துகொள்வீர்
தனிப்பிரம மாமுணர்வே வுணர்தலற்றுத்
தான்தானா யிருந்ததுவே சுத்தமாக்கும்
அனிபமிலா அவ்வுணர்வி லிருந்தசக்தி
அக்கினியிற் சூடுபோ லபின்னமாமே.

41. சக்தியென்றால் பெண்ணுமிலை வேறுமில்லை
தான்தானா முணர்வுக்கங் குணர்தல்சக்தி
இத்திரமே யெண்ணிமறந் திடாதுநிற்பீர்
இச்சக்தி விசிர்ம்பித்திங் குலகமான

அத்திரத்தை யிங்குரைப்ப னறிவுதன்றன்
அறிதலையே விரும்பியதை யறிந்ததற்த
சக்தியெனு மறிதலுக்க பேதகுணம்
சத்துவரா ஜசதமசு மூன்றதாமே.

42. இக்குணமோவ் வொன்றினிலு மூன்றதாகும்
இயல்குணத்தின் சத்துவத்தில் ருத்ரனுதம்
அக்குணத்துக் கடுத்ததுவிட் டுணுவுமாகும்
அயன்கடைசிக் குணத்துதிப்ப னறிந்துகொள்வீர்
நிற்கவிரா சதம்ஞானி சாஸ்திரவான்
நித்திரைசோம் பன்ஜீவர் மூவராவர்
மிக்கதம சாவரணம் விக்ஷேபம்
மேவியதாய் ஞானசக்தி விரிதல்சொல்வேன்.

43. ஜெனிப்பதுகேள் சுரோத்திரந்து வக்குசக்ஷு
சிங்குவையாக் ராணமொன்றி லொன்ருய்த்தோன்றும்
தனித்தனியிங் கிவையறியும் விஷயம்சொல்வேன்
சப்தபரி சரூபரச கந்தமாகும்
அனியத்தியமா யிவ்விஷய மறிவதாலே
யகிலசரா சரமிங்கே தோற்றலாகும்
இனிப்பகுத்திங் காதிசக்தி யிவ்வாருன
இயல்பெடுத்துங் களுக்கடக்கிச் சொல்லுகின்றேன்

44. தன்னையொன்று யறிவதீச னபேதமகும்
சத்துவமாங் குணமாயை சுத்தமாகும்
பின்னுமனே கமாயறிதல் ஜீவனாகும்
பேதமிரா ஜதகுணம சுத்தமாய்கை
அன்னியமாய்த் தோற்றுதல்வி க்ஷேபமாகும்
ஆவரணம் தனைமறைத்திங் கறியச்செய்யும்
இன்னிலையால் தாமதமிக் குணமேயாகும்
ஈசனுக்கு வித்தையீ தவித்தையாமே.

45. அவித்தையுறு ஜீவனுக்கா பரணமாகும்
ஆறிஞனுக்கு மீசனுக்கு மதுதானில்லை
துவிதமெங்கே தோற்றுதங்கா வரணமுண்டாய்
தொல்வடிவா மத்துவிதந் தோன்றுதாக்கும்
சிவத்துக்கற்ப் பனமனைத்துஞ் செய்துபின்னும்
சிவாமாகித் துன்பமற்ற செல்வனாகிப்
பவத்துடரை யறுப்பதற்கத் துவிதமான
பார்வையிக்கே யெழிதறியச் சொல்லுகின்றேன்

46. விடயமைந்தும் மெய்யெனவே காணுமட்டும்
விபரீத மாயுலகு தோற்றலாகும்
விடயமைந்தும் சக்தியின்முக் குணமேயென்னும்
விபரமறிந் ததைநீக்கில் நினைவாய்த்தோணும்

ஜடமனது மவ்விதமா யறிந்துநீக்கில்
தான்தானு முணர்வுணர்த லற்றுநிற்கும்
மடமையுளோ ராங்கறிந்து மறியேனென்பர்
மனதிறந்துந் தானிருந்த மகிமைகாணார்.

47. அங்காவ்வா றிருப்பதுநம் நிசசொரூபம்
அதையொழிந்தால் மாயைவசத் தலையாநிற்பர்
பங்கமிலா தங்கிருக்க வியலாதுன்றன்
பழக்கவசத் தாலுள்ளம் பதறிச்செல்லும்
துங்கநிலை விட்டசுத்த மாயையுள்ளே
சுழலாமல் நீசுத்த மாய்கைதன்னில்
விங்கிதயீ சனைப்போலச் சுகமதாக
விருப்பதற்கோர் நிலைசொல்வே னிருந்துகொள்வீர்

48. நினைவற்றங் கிருந்தவுமைய ன்றியேது
நினைவுக்கொன் றிலைபந்த நினைவுதானும்
நினையன்றி வேறன்று நினைவுதானே
நீயன்று நினைவுனது செயலேயாகும்
நினைவன்றிப் புலனில்லை புலன்கள்தானே
நினைவன்று புலனினைவின் செயலேயாகும்
நினைவுற்ற புலனன்றி விஷயமில்லை
நிர்விஷய மாய்ப்புலனும் நிற்பதில்லை.

9. விடயமைர் தேயுலக மூலகமந்த
விடையமைந் தாமலது வேறொன்றில்லை
விடையமைர் தாமுலகு புலன்களைக் தாம்நினைவை
விட் டயலாய் நிற்பதில்லை
திடமுறவிக் கிதையறிந்தா லுலகபேதம்
ஜெனிப்பதில்லை நீசாமெனன் றலைவதில்லை
திடமுறப்பொய் யாயுலகென் லுணர்வதல்லார்
ஜெகமில்லை சத்தியமென் றறிகுவீரே.

0. இவ்விதமே யானறிந்தா னந்தங்கொண்டேன்
னெழுபிறப்பின் றடர்பறுத்திக் கியங்காநின்றேன்
செவ்வியஞா னுணர்ந்த வடிவேயாகிச்
செகமெலா மவ்வடிவிற் றிகழாநின்றேன்.
சவ்வியுல கத்தவர்போல் தொழிலேசெய்தும்
ஞாலமதில் புளியோடும் பழம்போ[illegible]ன்.
அவ்விதநீ ரறிந்தஞ்ஞா னத்தைம[illegible]
யறியபா பதவாழ்வை யடைகுவீரே.

ஓம் தத்சத்

முற்றிற்று.

(02:417 N10)
800 009

நீங்கள் எப்பொழுதும்

மதுரை இம்பீரியல் சோடா கலர் பானங்களையே உபயோகியுங்கள். இதில் தேகத்திற்கு கெடுதல் செய்யக்கூடிய எவ்வித போலி வஸ்துக்களும், சேர்க்கப்படவில்லை என ஜில்லா டாக்டர் ஹார்வி முதல் எல்லா பிரபல டாக்டர்களும் நன்கு கூறுவதை கவனியுங்கள். இது தேகத்திற்கு நல்ல ஆரோக்கியத்தையும் சந்துஷ்டியையும் கொடுக்கக்கூடிய அருமையான வஸ்துக்கள் அபரிமிதமாய் சேர்க்கப்படுகிறதென்பதை நீங்கள் ஒவ்வொருவரும் அறிய வேண்டுவது அவசியம்.

இம்பீரியல் சோடா பாக்டரி,

மதுரை.

ஏஜெண்டுகள் தேவை.,